**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No. 126/2013**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.10** |
| **Name** | **:** | **Dr.Makeshram** |
| **Father's Name** | **:** | **Sriraghavan** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of this day of 03.01.2025.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இணைபேராசிரியராக எலும்பு முறிவு பிரிவில் பணியாற்றி வருகிறேன். 2012 செய்யாறு, அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, 13.05.2012 அன்று 12.45 P.M. மணிக்கு திரு.நாராயணசாமி 41 வயது ஆண் என்பவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக காவல் ஆய்வாளர், செய்யாறு காவல் நிலையம் அவர்களிடமிருந்து மோரணம் காவல் நிலைய குற்ற எண்.185/2012, 302 IPC வழக்கில் நாள் 13.05.2012 கடிதம் என்னால் பெறப்பட்டது. இந்த சடலம்

திரு.மோகன் SSI அவர்கள் அடையாளம் காட்ட, நான் அன்று மதியம் 2.15 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். அப்போது அவரது 2 கை மற்றும் கால்கள் விரைப்புத்தன்மை காணப்பட்டது. கண் மற்றும் வாய் மூடியும் காணப்பட்டது.

<u>வெளிப்புறக் காயங்கள் -</u>

1. 6 x 2x1 cm சிதைந்த காயம் வலது பக்க மண்டையில் ரத்த கட்டுடன் காணப்பட்டது.

<u>உள்புறக் காயங்கள் -</u>

1. மார்புக் கூட்டில் எந்த எலும்பு முறிவும் இல்லை.
2. நுரையீரல் மற்றும் இருதயத்தில் எந்த காயங்களும் இல்லை.
3. கழுத்து எலும்பில் எந்த முறிவும் இல்லை.
4. வயிறு வெற்றிடமாக இருந்தது.
5. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகம் ஆகியவற்றில் எந்த காயங்களும் இல்லை.
6. வலது பக்க மண்டை ஓட்டில் சுமார் 9 செ.மீ அளவு ஒரு நீளமான எலும்பு உடைந்து Right Parietal Region to Middle of Right Temporal Region மற்றும் இடது பக்க மண்டை ஓட்டில் சுமார் 10 செ.மீ அளவு ஒரு நீளமான எலும்பு உடைந்து From Left Temporal to Lower part of Left Occipital Region காணப்பட்டது.
7. உட்புற மூளையில் Diffuse Subdural Hematoma present in both parietal, both temporal and Occipital lobes.
8. அவரது வயிறு, குடல் மற்றும் கல்லீரலின் ஒரு பகுதி, ஒரு சிறுநீரகம் இரசாயண பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. இரசாயண பரிசோதனை

எண்.VLR/TOX.H/425/2012 நாள்.22.06.2012. இந்த அறிக்கையின் முடிவில், மது பொருட்கள் மற்றும் விஷத்தன்மை இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. ஆகவே மேற்படி பிரேத பரிசோதனை செய்யப்பட்ட நபர் மண்டை ஓடு மற்றும் மூளையில் அடிப்பட்டு இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் Viscera Report அடிப்படையில் 05.07.2012 தேதியிட்டது வழங்கினேன். நான் வழங்கிய **பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் Viscera Report** ஆகியவை முறையே **அ.த.சா.ஆ.11 மற்றும் அ.த.சா.ஆ.12.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் செய்த பிரேத பரிசோதனையில், அந்த நபருக்கு வெளிப்புறக் காயங்கள் ஒன்றே ஒன்று தான் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன Linear என்ற வார்த்தைக்கு பொருள் நீளமான எலும்பு முறிவு. முதல் விசாரணையில் நான் சொன்ன தலையில் ஏற்பட்ட காயங்கள் வேகமாக தரையில் மோதினால் ஏற்பட வாய்ப்புண்டா? என்றால் இருக்கலாம்.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.